**செய்தி வெளியீடு எண்: 692** **நாள் : 22.12.2015**

**<u>பத்திரிக்கைச்செய்தி</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. இரா.காமராஜ் அவர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை, கோபாலபுரம் பொது விநியோகத் திட்ட கிடங்கு, அமுதம் நியாய விலை அங்காடிகள், மண்ணெண்ணெய் வழங்கு நிலையம், பண்ணை பசுமை நுகர்வோர் கடை, 20 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் அங்காடி மற்றும் அமுதம் பல்பொருள் சிறப்பங்காடி ஆகியவற்றில் இன்று (22.12.2015) திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விலையில்லா அரிசி, மானிய விலையில் வழங்கப்படும் சர்க்கரை, கோதுமை மற்றும் சிறப்பு பொது விநியோகத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பருப்பு வகைகள், பாமாயில் ஆகியவை நியாய விலை அங்காடிகளில், போதுமான அளவு இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு சீரான முறையில் விநியோகம் செய்யப்பட்டு வருவதை மாண்புமிகு அமைச்சர் உறுதி செய்தார்.

எதிர்வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்கள், பச்சரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளும் வகையில், உணவுப் பொருள் வழங்கல் துறை ஆணையாளரின் ஒதுக்கீட்டின்படி, ஜனவரி 5ம் தேதிக்குள் அங்காடிகளுக்கு நகர்வு செய்து முடிக்கப்படவேண்டுமென அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

மேலும், அமுதம் நியாய விலை அங்காடிகள் ஆய்வின்போது, அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் தேவைக்கேற்ப தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதா என்பதைக் கேட்டறிந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், மழை, வெள்ள காலங்களில் நியாய விலை அங்காடிகள், மண்ணெண்ணெய் வழங்கு நிலையம், 20 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் அங்காடி, பண்ணை பசுமை நுகர்வோர் கடை ஆகியவற்றின் மூலம் தரமான பொருட்கள் சரியான எடையுடன் சீரான முறையில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது எனவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின் போது, அரசு உணவுத்துறை முதன்மை செயலாளர் திரு. சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு. சூ.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**